ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2385/08 - 2024 මැයි මස 20 වැනි සඳුදා - 2024.05.20
2385/08 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மத்திய மாகாண மாகாண சபை

துணை விதிகள்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப் படவேண்டிய சட்டத்தின் 126 (ix) மற்றும் (xiii) பிரிவுகளின் கீழ் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் அம்பகமுவ பிரதேச சபையின் குடிநீர் பாதுகாப்பு குறித்த துணைச் சட்ட விதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (விளைவாந்தன்மையான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (I) (அ) உபபிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய பிரதேச சபைச் சட்டத்தின் 123 ஆவது பிரிவின் (1) ஆவது உபபிரிவின் ஊடாக எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ. கமகே ஆகிய என்னால் அனுமதிக்கப்பட்டுள்ளதெனவும் இந்த வர்த்தமானி அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து துணைச்சட்டம் அம்பகமுவ பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமுல்படுத்தப்படும் எனவும் இத்தால் அறிவிக்கின்றேன்.*

**சட்டத்தரணி லலித் யூ. கமகே,**
மத்திய மாகாண ஆளுநர்.

ஆளுநர் அலுவலகம்,
மாளிகை சதுக்கம்,
கண்டி,
2024, ஏப்பிறல் 29.

1A – PG6734 – 104 (2024/05)
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## அம்பகமுவ பிரதேச சபையின் குடிநீர் மற்றும் நீர் நிலைப் பாதுகாப்பு தொடர்பான துணைச் சட்டங்கள்

1. அம்பகமுவ பிரதேச சபையின் அதிகார வரம்பிற்குள் வாழும் மக்களின் பொது சுகாதாரப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் பொருட்டு தனியார் மற்றும் பொது குடிநீர் பயன்பாட்டை பாதுகாப்பதற்காக சம்பந்தப்பட்ட நீர் மூலங்களை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை அதிகார பிரதேசத்தில் இயங்கும் குடிநீர் திட்டங்கள் தொடர்பான நீர் மூலங்களை பாதுகாப்பது தொடர்பான நடவடிக்கையெடுத்தல் மற்றும் அதன் விளைவான விடயங்களின் பொருட்டு ஏற்பாடுகளை மேற்கொள்ளல் என்பவற்றிற்காக இந்த துணைச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

2. இந்தத் துணைச்சட்டத்தினை உருவாக்குவதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 126 (ix) மற்றும் 126 (xiii) உபபிரிவுகளுடன் வாசிக்கப்பட வேண்டிய அந்தச் சட்டத்தின் 122(1) இன் உப பிரிவின் கீழ் அம்பகமுவ பிரதேச சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

3. இந்ததுணைச்சட்டம்பிரதேசசபையின்குடிநீர்மற்றும்நீர்நிலைப்பாதுகாப்புதொடர்பானதுணைச்சட்டம்என அழைக்கப்படும்.

4. அம்பகமுவ பிரதேச சபை அதன் அதிகார வரம்பிற்குள் உள்ள பொது மக்களின் பாவனைக்காக குடிநீர் வழங்கும் ஒவ்வொரு நீர் மூலங்கள் தொடர்பிலும் பின்வரும் தகவல்களைப் பராமரிக்க வேண்டும்.

   I. நீர் மூலத்தின் பெயர்
   II. அமைவிடம்
   III. கிராம அலுவலர் பிரிவு
   IV. அமைவிட ஒருங்கிணைப்புகள்
   V. நீர் மூலம் அமைந்துள்ள காணியின் உரிமை/உடைமை
   VI. அணுகல் (செல்லும் வழி முடிந்தவரை தோராயமான திட்டத்தில் காட்டப்பட வேண்டும்)
   VII. பயன்பாட்டின் தன்மை (தனியார்/பொது)

5. நீர் மூலம் தரைக்கீழுள்ள நீர் மூலமாக இருக்கும் போது, அதிலிருந்து 15 மீற்றர் சுற்றளவிற்குள் எந்த ஒரு நபரும் பின்வரும் ஒவ்வொரு செயலிலும் ஈடுபடக் கூடாது.

   i. விலங்குகள் உட்புகுதல் பட்டியிலடைத்தல், கயிற்றில் கட்டி வைத்தல் அல்லது விலங்குகள் நுழைய அனுமதிக்கும் விதத்தில் பேணுதல்

   ii. ஏதேனும் கழிவுப்பொருளொன்றை இடல் புதைத்தல் அல்லது குவித்தல்

   iii. திறந்தவெளியில் தீ வைப்பது அல்லது நீர் மூலத்தை சேதப்படுத்தும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளல்.

   iv. தோண்டுதல்

   v. கழிவு நீரை ஏதேனும் வடிகால் வழியாக திருப்பி விடுவதற்கு நடவடிக்கை எடுப்பது அல்லது கட்டப்பட்ட வடிகால்களை பழுதடைந்த நிலையில் பயன்படுத்த அனுமதித்தல்

   vi. மேற்தரை நீரை எத் தூரத்திலிருந்தும் நீர் மூலத்திற்கு நேரடியாகப் பாய்ந்து செல்ல இடமளித்தல்.

   vii. நீர் மூலம் ஒரு ஆழமற்ற கிணறாக இருக்கும்போது, கிணற்றின் விளிம்பில் இருந்து 4.5 மீற்றருக்கு குறைவான தூரத்திலிருந்து மேற்தரை நீர் கிணற்றுக்குள் ஊடுறுவ அனுமதித்தல்.

   viii. நீர் மூலம் ஒரு ஆழமற்ற கிணறாக இருந்தால், தரை மட்டத்திலிருந்து 3 மீற்றருக்கு குறைவான ஆழத்தில் கிணற்றுக்குள் நீர் கசியும் வகையில் அமைந்திருத்தல்.

   ix. நீர் மூலம் ஆழமற்ற கிணறாக இருக்கும் போது, கிணற்றின் பாதுகாப்பிற்காக சீமெந்து மற்றும் இரும்பு கான்கிரீட் மற்றும் கிணறு மூடிகள் பயன்படுத்தப்பட்டால், அதற்குப் பயன்படுத்தும் சீமெந்தை தண்ணீருடன் கலக்க மற்றும் இரும்பை சுற்றி உருவாக்கும் ஒரு நீருடன் கலக்கும் வகையில் விளங்குவதற்கு இடமளித்தல்.

   x. நீர் மூலம் ஆழம் குறைந்த கிணறாக இருக்கும் போது, பிரதேச சபைத் தலைவர் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அல்லது அவர்களால் முறையான அங்கீகாரம் பெற்ற ஒருவரால் நியமிக்கப்படும் கால எல்லைக்குள் கிணற்று நீரை முற்றாக வெளியகற்றி சுத்தமாகப் பராமரிக்க நடவடிக்கையெடுக்கத் தவறியிருத்தல்.

6. நீர் மூலம் ஆழம் குறைந்த கிணறாக இருக்கும் போது பிரதேச சபைத்தலைவர் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அல்லது அவர்களால் முறையான அங்கீகாரம் பெற்ற ஒருவரால் நியமிக்கப்படும் கால எல்லைக்குள் கிணற்று நீரை முற்றாக வெளியகற்றி சுத்தமாகப் பராமரிக்க நடவடிக்கையெடுக்கத் தவறியிருத்தல்.

i. விலங்குகள் உட்புகுதல், பட்டியிலடைத்தல், கயிற்றில் கட்டிவைத்தல் அல்லது விலங்குகள் நுழைய அனுமதிக்கும் விதத்தில் பேணுதல்.

ii. வாகனங்கள் அல்லது வேறு இயந்திர உபகரணங்களைக் கழுவுதல்

iii. குளிப்பதற்குப் பயன்படுத்துதல்

iv. ஏதேனும் கழிவுகளை போடுதல், புதைத்தல் அல்லது குவித்தல்

v. திறந்தவெளியில் தீ வைத்தல் அல்லது நீர் மூலத்தை சேதப்படுத்தும் எந்த நடவடிக்கையும் எடுத்தல்.

vi. தோண்டுதல்.

vii. எந்தவொரு வடிகால் வழியாகவும் கழிவு நீரை திசை திருப்பும் வகையில் எந்த நடவடிக்கையும் எடுத்தல்

viii. காடு வளர்ப்பு தவிர எந்த பயிர்ச் செய்கை நோக்கத்திற்கும் பயன்படுத்தல்.

ix. எந்த ஒரு நபரும் தண்ணீரை வெளியேற்றுவதற்கு வாளி அல்லது வேறு ஏதேனும் கருவியைப் பயன்படுத்துதல் இதனால் ஏதேனும் கருவிகள் நீர் மூலத்துடன் கலக்கலாம்.

7. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் நடத்தப்படும் நீர் செயற்திட்டம் மற்றும் வீட்டு உபயோகத்திற்கு நீர் மூலத்தைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் தவிர, நீர் மூலத்தைப் பயன்படுத்தி குடிநீர் திட்டத்தை நடாத்தும் ஒவ்வொரு நபரும் அல்லது நிறுவனமும் இந்த துணை சட்டத்தின் கீழ் இரண்டாவது அட்டவணை பிரகாரம் அனுமதிப்பத்திரம் பிரதேச சபையின் தலைவரிடமிருந்து பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

8. இந்த துணைச் சட்டத்தின் கீழ் உரிமத்திற்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு நபரும், இந்த துணைச் சட்டத்தின் முதல் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் விண்ணப்பிக்க வேண்டும்.

9. இந்த துணைச் சட்டத்தின் கீழ் உரிமத்திற்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு நபரும், இந்த துணைச் சட்டத்தின் நிபந்தனைகளை பூர்த்தி செய்யாத வரை தலைவரால் உரிமம் வழங்க மாட்டார்.

10.1. நீர் விநியோகம் நீர்க் குழாய் அமைப்பை மட்டுமே பயன்படுத்தி நுகர்வுக்கு நீர் விநியோகம் மேற்கொள்ளப்படும் வேளையில்,

i. விநியோகிக்கப்படும் நீர் இலங்கைத் தர நிர்ணய நிறுவனம் வழங்கிய நியமங்களுக்கு உட்பட்டது என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

ii. விண்ணப்பதாரர் ஒரு சங்கம் சார்ந்த அமைப்பாக இருந்தால், அது பிரதேச சபையில் அல்லது சமூக நீர்த் திணைக்களத்திலோ பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

iii. நீர் திட்டம் தொடர்பான அனைத்து கூறுகளையும் உள்ளடக்கிய திட்டம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

iv. நீர் திட்டத்திற்காகப் பயன்படுத்தப்படும் அனைத்து கூறுகளும் கட்டுமானங்களும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபையின் பிரமாணங்களுக்கும் இணங்கியிருக்க வேண்டும்.

v. நீர் திட்டத்திற்காகப் பயன்படுத்தப்படும் பிரதான குழாய் அமைப்பு, ஒரு தனியார் சொத்தில் பயன்படுத்தப்படும் போது, சம்பந்தப்பட்ட உரித்தாளரினால் உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும் மற்றும் வேறொரு அதிகார அமைப்பிற்கு சொந்தமான ஒரு சொத்தில் பயன்படுத்தப்படும் போது, சம்பந்தப்பட்ட அதிகார அமைப்பினால் உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

vi. குடிநீர் திட்டத்தின் கீழ் பணியமர்த்தப்படும் பணியாளர்கள் குறித்து, விண்ணப்பப்படிவத்தின் கீழ் கோரப்பட்ட தகவல்களும், பணியாளர்கள் மாறும் போது அதற்குரிய தகவல்களும் சமர்ப்பிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

10.2. நீர் விநியோகம் ஒரு பவுசர் அல்லது தண்ணீர் கொள்கலன் அல்லது வேறு ஏதேனும் கருவியைப் பயன்படுத்தி வணிக நோக்கங்களுக்காக தண்ணீர் சேகரிக்கப்பட்டு விநியோகிக்கப்படும் போது,

(1) விநியோகிக்கப்படும் நீர் இலங்கை தர நிர்ணய நிறுவனம் வழங்கிய நியமங்களுக்கு உட்பட்டது என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

(2) இந்த துணை விதிகளின் படி பராமரிக்கப்படும் நீர் மூலத்தின் கீழ் நீர் பெறப்பட்டதா என்பது தொடர்பான உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(3) பயன்படுத்தப்படும் நீர் மூலம் மற்றும் விநியோகிக்கப்படும் நீர் தொடர்பாக, 1964 இன் நீர்வள சபைச்சட்டம் இல. 24 இன் கீழ் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள கட்டளைகளின் பிரகாரம் தேவைகள் பூர்த்திசெய்யப்பட்டதாக என்பது குறித்து மேற்படி சபையிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(4) பயன்பாட்டிற்காக வழங்கப்பட்ட நீர், நீர்வள சபையால் பரிந்துரைக்கப்பட்ட எந்த முறையிலும் சுத்திகரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(5) நீர் விநியோகத்திற்காக வாகனம், கொள்கலன் அல்லது வேறு ஏதேனும் கருவி பயன்படுத்தப்பட்டால், பயன்பாடு பற்றிய தகவல் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

11. இந்த துணைச் சட்டத்தின் கீழ் உரிமம் கோரப்பட்டால், விண்ணப்பத்தைப் பெற்ற ஒரு மாதத்திற்குள் விரும்பிய உரிமத்தை வழங்குவது அல்லது அதை வழங்க முடியாவிட்டால் அதற்கான காரணங்களை விண்ணப்பதாரருக்கு எழுத்து மூலமாக அறிவித்தல் தலைவரின் கடமையாகும்.

12. இந்த துணைச் சட்டத்தின் கீழ் உரிமத்திற்கான கட்டணம், அடிப்படைச் சட்டத்தின் விதிகளுக்கு உட்பட்டு உள்ளூராட்சி சபையால் தீர்மானிக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் வலிதானதாகும்.

13. இந்த துணைச் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற ஒவ்வொரு நபரும் பின்வரும் நிபந்தனைகளின்படி செயற்பட வேண்டும்.

i. விநியோகிக்கப்படும் நீர், இலங்கை தர நிர்ணய நிறுவனத்தால் வழங்கப்பட்ட நியமங்களுக்கு இணங்கியிருத்தல் வேண்டும்.

ii. நீர் சட்டத்திற்கு பயன்படுத்தப்படும் அனைத்து கூறுகளும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபையின் பிரமாணங்களுக்கு இணங்கியிருத்தல் வேண்டும்.

iii. உரிமத்திற்கு விண்ணப்பிக்கும் போது உறுதிப்படுத்தப்பட்ட நீர் மூலத்திலிருந்து பெறப்பட்ட நீர் உரிமம் தொடர்பான நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றதென்பதை உறுதிப்படுத்தும் வகையில் செயல்பட வேண்டும்.

iv. நீர் விநியோகத்திற்கு பயன்படுத்தப்படும் கொள்கலன்கள் மற்றும் பிற கருவிகள் இலங்கை தர நிர்ணய பணியகம் வழங்கிய நியமங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

v. பயன்படுத்தப்படும் நீர் மூலம் மற்றும் விநியோகிக்கப்படும் நீர் 1964 ஆம் ஆண்டின் நீர் வள சபைச்சட்டம் இல. 24 இன் கீழ் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள கட்டளைகளின் பிரகாரம் பராமரிக்கப்படல் வேண்டும்.

vi. பணியமர்த்தப்பட்ட ஒவ்வொரு பணியாளரும் தோல் நோய் அல்லது தொற்று நோயால் பாதிக்கப்பட்ட நபராகவோ அல்லது அத்தகைய நபருடன் தொடர்பு கொண்டவராகவோ இருக்கக் கூடாது.

vii. பணியாளர்கள் வேலை செய்யும் எல்லா நேரங்களிலும் ஆரோக்கியமானதும் மற்றும் சுத்தமானதுமான ஆடைகளை அணிவதோடு பரிந்துரைக்கப்பட்டபடி கையுறைகளையும் அணிய வேண்டும்.

viii. அதிகார எல்லைக்குள் உள்ள நோய் தடுப்பு மற்றும் தனிமைப்படுத்தல் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் உத்தரவுகள் நடைமுறையில் இருக்கும் பட்சத்தில் அந்த உத்தரவுகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு ஏற்ப சேவைகள் பராமரிக்கப்பட வேண்டும்.

ix. நீர் திட்டம் தொடர்பாக பணியமர்த்தப்படும் ஒவ்வொரு பணியாளரும் உரிமத்திற்கு விண்ணப்பிக்கும் போது சமர்ப்பிக்கப்பட்ட தகவலில் குறிப்பிடப்பட்ட அதே பெயரினைக் கொண்டவராக இருக்க வேண்டும் அல்லது அதன் பிறகு எச்சந்தர்ப்பத்திலும் பணிமர்த்தப்பட்டால் பிரதேச சபைத் தலைவரிடம் சமர்ப்பிக்கப்படுகையில் அத்தகவல்களுக்கு பெயர் உள்ளடக்கப்பட்ட நபரொருவராக இருக்க வேண்டும்.

x. குடிநீர் திட்டத்தின் கீழ் பணிக்கமர்த்தப்பட்ட பணியாளர்கள் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை அல்லது சுகாதார மருத்துவ அதிகாரி பரிந்துரைத்த காலக்கெடுவிற்குள் பணியாளர்கள் குறிப்பிட்ட பணிக்கு தகுதியானவர்கள் என்பதை உறுதிப்படுத்தும் சான்றிதழின் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

14. தேசியநீர்வழங்கல்சபை அல்லாமல் இந்த துணைச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமத்தின் கீழ் அதிகார வரம்பிற்குள் உள்ள எந்தவொரு நீர் மூலமும் பயன்படுத்தப்படும் பட்சத்தில் உரிமைதாரர் தவிர வேறு யாரும் அந்த நீர் மூலத்தை பயன்படுத்தவோ அல்லது முறையற்ற நீர் இணைப்பை மேற்கொள்ளலாகாது.

15. இத்துணைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் படி இத் துணைச்சட்டத்துடன் தொடர்புடைய ஏதேனும் நீர் மூலம் பராமரிக்கப்படுகிறதா என்பதை பரிசீலிப்பதற்கு பொருத்தமான மற்றும் நியாயமானதாக கருதப்படும் நேரத்தில் சபைத் தலைவர் அல்லது தலைவரால் குறிப்பாக அங்கீகரிக்கப்பட்ட எந்த அதிகாரியும் நீர் மூலம் அமைந்துள்ள வளாகத்திற்குள் நுழைய, மாதிரிகளை எடுத்து, விநியோகிக்கப்பட்ட நீர் அல்லது கொள்கலன்கள் மற்றும் கருவிகள் தொடர்பாக தேவையான ஆய்வுகளை மேற்கொள்வதற்காக அல்லது துணைச்சட்டங்களுக்கு தேவையானதாக கருதப்படும் பிற தகவல்களை சேகரித்தல் மற்றும் அந்த நோக்கத்திற்காக தேவையானதாக கருதப்படும் எந்த தகவலையும் கோருவது சட்டபூர்வமானதாகும்.

16. இந்த துணைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமம் தலைவரால் குறிப்பாக இரத்து செய்யப்படாவிட்டால் வழங்கப்பட்ட ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியுடன் காலாவதியாகும்.

17. இந்த துணைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு மாறாக குடிநீர் மூலத்தைப் பயன்படுத்துகையில் அல்லது குடிநீர் விநியோகிக்கையில் அது தொடர்பில் கண்டறியப்படும் எச் சந்தரப்பத்திலும் தலைவர் குறித்த உரிமையாளருக்கு அத் துணைச்சட்டத்திற்கு இணங்கியொழுகுவதற்கு நியாயமான கால அவகாசம் அளித்து எழுத்து மூலமாக அறிவித்தல் வேண்டும். அவ்வாறு கொடுக்கப்பட்ட நியாயமான காலமானது 14 நாட்களுக்குள் மேற்படாமல் இருக்க வேண்டும்.

18. மேற்கூறிய பிரிவின் கீழ் வழங்கப்பட்ட காலக்கெடுவிற்குள் எந்தவொரு உரிமையாளரும் துணைச் சட்டங்களுக்கு இணங்கத் தவறினால், தலைவர் இந்த துணைச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமத்தை இரத்து செய்து அதுபற்றி உரிமைதாரருக்கு எழுத்துமூலமாக அறிவிக்க வேண்டும்.

19. இந்தசட்டத்தின் மேற்கூறியபிரிவுகளின் கீழ் எதுவும் குறிப்பிடப்பட்டிருந்தாலும், இந்ததுணைச்சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் தொடர்பான எந்தவொருநீர் திட்டத்திற்கும் முதல் முறையாக அனுமதிக்குவிண்ணப்பிக்கும்போது மற்றும் அனுமதிக்குமீண்டும் விண்ணப்பிக்கும்போது, இந்தசட்டத்தின் கீழ் பெறப்பட்ட அனுமதியின் கீழ் நீர் திட்டம் தொடர்பான மாற்றங்கள் தலைவருக்குரிய பரிந்துரைகளைவழங்கநியமிக்கப்பட்ட குழுவால் பரிந்துரைக்கப்பட்டாலொழிய தலைவரினால் உரிமம் வழங்கப்படமாட்டாது.

20. இந்த துணைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் நோக்கங்களுக்காகவும் அதிகார எல்லைக்குள் செயற்படும் நீர்த் திட்டங்கள் தொடர்பாக குடிநீரின் பாதுகாப்பை உறுதிசெய்ய சபைக்கு பரிந்துரைகளை வழங்கவும் பின்வருபவர்களைக் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட வேண்டும்.

i. தலைவர்
ii. செயலாளர்
iii. தொழில்நுட்ப அதிகாரி
iv. சுற்றுச்சூழல் அதிகாரி
v. சுகாதார மருத்துவ அதிகாரி அல்லது அவரால் பரிந்துரைக்கப்பட்ட உத்தியோகத்தரொருவர்.

எவ்வாறாயினும் சேவையின் தேவைக்கேற்ப குழுவின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக சபையின் தலைவரால் பரிந்துரைக் கப்பட்ட வேறு எந்த உத்தியோகத்தரையும் குழுவிற்கு உதவியாக நியமிக்கப்படுவதற்கு மேலே குறிப்பிடப்பட்ட விதிகள் தடையாக இருக்கக்கூடாது.

21. இத்துணைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிக்குட்பட்டு அனுமதியின்றி, நீர் மூலத்தை பயன்படுத்துவது அல்லது குடிநீர் திட்டமொன்றுமேற்கொள்கையில் அல்லது பிரிவு 5 இற்குமுரணாகச்செயல்படுவது குற்றமொன்றாவதோடு அக்குற்றம்

தொடர்பாக நீதவான் நீதிமன்றமொன்றில் குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் பிரிவு 122 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தண்டணைக்குட்படுதல் வேண்டும்.

22. இத் துணைச்சட்டம் அமுல்படுத்தப்படும் திகதியில் அதிகார பிரதேசத்தில் ஒரு நபர், நிறுவனம் அல்லது எந்தவொரு நீர்த்திட்டத்தை இயக்கும் அமைப்பும் குடிநீர்த் திட்டம் தொடர்பாக இந்த துணைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகும் பொருட்டு ஏதேனும் காலக்கெடுவைக் கோரினால் 20 ஆவது விதியில் குறிப்பிடப்பட்ட குழுவின் பரிந்துரைகளை கருத்தில் கொண்டு, தலைவர் தயை காலம் வழங்குவது சட்டபூர்வமானதாகும். எவ்வாறாயினும் இந்த பிரிவின் கீழ் வழங்கப்பட்ட தயை காலமானது இத் துணைச் சட்டம் நடைமுறைக்கு வந்த தினத்திலிருந்து ஒரு வருட காலத்தை மிஞ்சாதிருத்தல் வேண்டும்.

23. இந்த துணைச்சட்டத்தின் விதிமுறைகளின் பதங்கள் தொடர்பில், வேறேதேனும் அர்த்தம் தேவைப்படாதவிடத்து இந்த சட்டங்களில்,

பிரதேச சபை என்பது பிரதேச சபையையும்,

தலைவர் என்பது பிதேச சபை தேர்தல் சட்டத்தின் படி அம்பகமுவ பிரதேச சபைக்கு நியமிக்கப்பட்ட தலைவர் அல்லது தலைவரின் பதவியானது இயங்காத பட்சத்தில் தலைவரின் கடமைகள் மற்றும் பணிகளை செய்ய எழுத்து மூலமான சட்டத்தின் படி நியமிக்கப்படும் நபரொருவரும்

1980 ஆம் ஆண்டின் தேசிய சுற்றுச்சூழல் சட்டம் இலக்கம் 47 இல் அவ்வப்போது திருத்தப்பட்டு, கழிவு என்பதற்கு கொடுக்கப்பட்டுள்ள அதே அர்த்தமும் “அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி” என்பது ஒரு குறிப்பிட்ட செயற்பாட்டை செய்ய பொதுவாக அல்லது குறிப்பாக தலைவரால் எழுத்து மூலமாக அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியொருவரும்.

நீர் மூலம் என்பது, குடிநீர் தேவையின் பொருட்டு பூமியின் மேல் உள்ள நீர் அல்லது பூமிக்கு அடியில் உள்ள நீர் பாவனைக்கெடுப்பதன் பொருட்டு காரணமாயமைந்த இயற்கையான அல்லது செயற்கையாக மேற்கொள்ளப்படும் நீர் ஒன்றாக சேர்த்தல் அல்லது பொது குடிநீர் பயன்பாட்டிற்கான சாத்தியக்கூறுகள் கொண்ட இடமொன்றாகும்.

**அட்டவணை இலக்கம் - 01**

**குடிநீரினைப் பெறுவதற்கு நீர் மூலங்களைப் பயன்படுத்துவதற்கான உரிமத்துக்கான விண்ணப்பப்படிவம்**

01. விண்ணப்பதாரரின் பெயர் :

02. முகவரி :

03. விண்ணப்பதாரர் ஒரு வியாபாரமாக இயங்கினால் பதிவு எண், விண்ணப்பதாரர் சங்கமாக இருந்தால் சம்பந்தப்பட்ட சங்கத்தின் பதிவு எண் :

04. நீர் மூலத்தின் அமைவிடம் பற்றிய தகவல்கள்

I. நீர் மூலத்தின் பெயர் :

II. அமைவிடம் (தோராயமான திட்டத்தில் காட்டப்பட வேண்டும்) :

III. நீர் மூலத்தின் தன்மை :

IV. கிராம அலுவலர் பிரிவு :

V. அமைவிட ஒருங்கிணைப்புகள் :

VI. நீர் மூலம் அமைந்துள்ள காணியின் உரிமை/உடைமை :

VII. அணுகல் (முடிந்தவரை தோராயமான திட்டத்தில் - காட்டப்பட வேண்டும்) :

VIII. பயன்பாட்டின் தன்மை (தனியார்/பொது) :

05. குடிநீர் திட்டத்தில் பணிபுரியும் பணியாளர்கள் பற்றிய தகவல்கள் :

| தொ. இல. | பெயர் | முகவரி | தேசிய அடையாள அட்டை இலக்கம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

06. வணிகத்திற்காக பயன்படுத்தப்படும் வாகனங்கள் பற்றிய தகவல்கள்

| தொ. இல. | வாகன எண் | வாகன வகை |
|---|---|---|
| | | |
| | | |

மேலே உள்ள எண்கள் 5 மற்றும் 6 இல் உள்ள தகவல்கள் மாறும்போது தலைவருக்குத் தெரிவிக்க வேண்டும்.

07. முன்மொழியப்பட்ட நீர் திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை

08. தினசரி பயன்பாட்டிற்காக எதிர்ப்பார்க்கப்படும் நீரின் கொள்ளளவு

பூர்த்திச் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் இணைப்புக்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

i. ஒரு சங்கமாக இருந்தால் அமைப்புச் சட்டத்தின் பிரதியொன்றும் சங்கத்தின் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றும்

ii. நீர் திட்டத்துடன் தொடர்புடைய கூறுகள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டன என்பதைக் காட்டும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தொழில்நுட்ப அதிகாரியால் சான்றளிக்கப்பட்ட கிட்டிய திட்ட வரைபு.

iii. நீர் திட்டம் தொடர்பான அனைத்துக் கூறுகளும் அடங்கிய திட்ட வரைபு

iv. தனியார் சொத்தில் குடிநீர் திட்டத்திற்காகப் பயன்படுத்தப்படும் பிரதான குழாய் அமைப்பைப் பயன்படுத்தும் போது சம்பந்தப்பட்ட உரித்தாளரும், வேறு அதிகார அமைப்பிற்கு சொந்தமான ஒரு சொத்தில் பயன்படுத்தப்படுகையில், சம்பந்தப்பட்ட அதிகாரியினாலும் அனுமதி வழங்கப்பட்ட ஆவணங்கள்

விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி:

(இவ் விண்ணப்பப்படிவத்துடன் வழிகாட்டுதல்கள் அடங்கிய ஆவணத்தின் பிரதியொன்று வழங்கப்படும்)

**அட்டவணை இலக்கம் 02**

பிரதேச சபையின் அதிகார வரம்பிற்குள் உள்ள நீர் மூலத்தைப் பயன்படுத்தி குடிநீர் திட்டத்தை நடத்துவதற்கு வழங்கப்படும் உரிமமாகும்.

01. உரிமையாளரின் முழுப் பெயர் :

02. முகவரி :

03. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

04. அனுமதி வழங்கப்படும் நீர் மூலம் :

05. அனுமதிக்கப்பட்ட காலம் :

.............................................
தலைவர்,
பிரதேச சபை.

திகதி :................................

EOG 05 - 0145